## நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 19.02.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் மழை பெறப்படவில்லை.
2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 20$^o$ - 21$^o$ செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 7$^o$ - 9$^o$ செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 66-85% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 67-82% இருந்தது. காற்றின் வேகம் 9-24 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 20.02.16 | 21.02.16 | 22.02.16 | 23.02.16 | 24.02.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 18 | 18 | 18 | 18 | 18 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 9 | 9 | 9 | 9 | 9 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 72 | 72 | 72 | 72 | 72 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 12 | 12 | 12 | 12 | 12 |
| காற்றின் திசை | 160 | 160 | 160 | 160 | 160 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை வராது என எதிர் பார்க்கப்படுகிறது.
- சிவப்பு சிலந்தி தாக்குதலை தவிர்க்க, தேயிலை தோட்டத்தில் நிழல் தரும் சில்வர் ஒக் மரங்களை மே மாதம்வரை வைத்திருந்து அதன் பின் கவாத்து செய்யலாம்.
- வெள்ளை பூண்டில் அறுவடையின் போது ரப்பராகும் நிகழ்வை தடுக்க, யூரியா உரத்தை தவிர்த்து அமோனியம் சல்பேட் இடவேண்டும்.
- காபி தோட்டத்தில், கீழே விழும் பழங்களை அப்புறப்படுத்தல் மற்றும் அறுவடை கால முடிவில் மீதமின்றி முழுவதுமாக அறுவடை செய்வதன் மூலம் காபி பழத்துலைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.
- தேயிலை தோட்டத்தில சிவப்பு சிலந்தி தாக்குதல் தென்பட்டால், வேப்பெண்ணை அல்லது ப்ராப்ர்கைட் அல்லது ப்ரபனோபாஸ் அல்லது டைகோபால் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை